REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 ஜனவரி 29 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 89 இல. 25 | January 29,Friday, 2021 | 20பக்கங்கள் | 30/-

கொரோனா வைரஸ் தொற்று

## குணமடைந்தோர் 54,435 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்து 694 ஆக அதிகரித்துள்ளது.

வைரஸ் தொற்று காரணமாக நேற்று முன்தினம் மேலும் இருவர் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 290 ஆக

06

எயார் இந்தியா – 281 விமானம் மூலமாக பாதுகாப்பான முறையில்

# நாட்டை வந்தடைந்த தடுப்பூசிகள்

இந்திய தூதுவரினால் ... பூர்வமாக கையளிப்பு






**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட் 19 வைரஸுக்கு எதிராக செலுத்தப்படும் ஐந்து இலட்சம் டொஸ் தடுப்பூசிகள் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு நேற்று அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தடுப்பூசிகளை நேற்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கையளித்தார்.

இந்தியாவில் சேரம் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் எக்ஸ்ரா ... இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், தடுப்பூசிகளை ஜனாதிபதியிடம் கையளிக்கும் ... திருந்த கோரிக்கையின் பிரகாரமே முதல் கட்டமாக ஐந்து இலட்சம் தடுப்பூசிகள் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன.




இவ்வாறு வழங்கப்பட்டுள்ள ஐந்து இலட்சம் தடுப்பூசிகளை இரண்டரை இலட்சம் பேருக்கு செலுத்த முடியுமென அரசாங்கம் கூறியுள்ளதுடன், இன்று சனிக்கிழமை முதல் தடுப்பூசிகளை செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம்

06




## பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துள்ள ஜனாதிபதி

டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளார்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட் 19 வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தால் கொவிட் 19 வைரஸுக்கு எதிரான 05 இலட்சம் தடுப்பூசிகள் நேற்று இலங்கைக்கு வழங்கப்பட்டன. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்த தடுப்பூசிகளை நேற்று பிற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கையளித்திருந்த

06

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தலில் வெற்றி;

## நூறு நாடுகளின் பகுப்பாய்வில் இலங்கைக்கு பத்தாவது இடம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



கொரோனா வைரஸ் தொற்று நோயை கட்டுப்படுத்திவரும் சிறந்த நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 10ஆவது இடம் கிடைத்துள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் கொவிட19 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட இறப்புகள், பரிசோதனை சதவிகிதங்களை அடிப்படையாக கொண்டு அவுஸ்ரேலியாவின்

06

கொழும்பில் இன்று முதல்

## ஆறு வைத்தியசாலைகளில் கொரோனா தடுப்பு மருந்துகள்

வழங்க நடவடிக்கை என்கிறார் டாக்டர் ஹேமந்த

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் நேற்று ஆறு பிரதான வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இன்று முதல் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாக உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அதேவேளை அரசாங்கத்தின் தடுப்பூசி ஏற்றல் மத்திய நிலையங்களில் மாத்திரம் தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் மேல் மாகாணத்தில் 6 முக்கிய வைத்தியசாலைகளில் அதற்கான செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாகவும் அமைச்சு தெரிவித்தது.

அதற்கிணங்க முதற்கட்டமாக சுகாதார பணியாளர்கள் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு தடுப்பூசி

06



தைப்பொங்கல் பண்டிகையைச் சிறப்பிக்கும் வகையில் நேற்று (28) கிழக்கு மாகாண ஆளுநரின் திருகோணமலை செயலகத்தில் ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் தலைமையில் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதானாயகே, கிழக்கு மாகாண செயலாளர். யு.எல்.ஏ.அஸீஸ் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (திருமலை மாவட்ட விசேட நிருபர்)

440 பேரிடம் வாக்குமூலம் பெற்ற நிலையில்

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் நிறைவடைவு

இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் ஜன.31 இல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நாளை மறுதினம் 31 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடந்த 26ஆம் திகதி வரை மேற்படி ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் ஒரு வருடத்திற்கு மேலாக மேற்கொண்ட விசாரணைகளில் 440 பேரிடம் ஆணைக்குழு வாக்குமூலங்களை பதிவு செய்து கொண்டுள்ளது.

06

## பெப்ரவரி மாத சம்பளத்துடன் 1000 ரூபா; இல்லையேல் போராட்டம் வெடிக்கும்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி சம்பளம் வழங்கும்போது 1,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து

06

## தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் விடயங்களா?

1997 இலக்கத்துடன் தொடர்பு கொள்ள கோரிக்கை

## கிழக்கு முனைய விவகாரம்; ஜனாதிபதியுடன் இன்று முக்கிய பேச்சுவார்த்தை



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில்

திருமலை, புல்மோட்டையில்